# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1775/20 - 2012 සැප්තැම්බර් 14 වැනි සිකුරාදා - 2012.09.14

**1775/20 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை**

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : ஆர்ஏரீ/எல்ஏஎன்/09/எப்ஐ/77.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், இரத்மலானை பிரதேச செயலாளர் பிரிவில், தெஹிவளை - கல்கிசை மாநகர சபை எல்லைக்குட்பட்ட கந்தவளை கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2012.01.17 ஆந் திகதிய மற்றும் 521001/06/01 ஆம் இலக்க கடத்திரள் வரைபடத்தில் துண்டு இல. 23 எனக் காட்டப்பட்ட 0.1953 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட காணித் துண்டு:

**1. துண்டு இல. 23**

காணியின் பெயர் : கந்தவளவத்த, இரத்மலானை, கந்தவளை வீதியில் வரிமதிப்பீட்டு இல. 76 ; விபரம்: புதர்க்காடு; உரிமை கோருபவர் : அரசு; ஆரம்ப உரிமை கோருபவர் : டா வின்சி பி. எஸ். டீ. இன்ஜினியரிங் கண்ஸ்ட்ரக்ஷன் அன்ட் இன்வெஸ்ட்மன்ட் பிரைவெட் லிமிடட், இல. 39, சென் மைக்கல் வீதி, கொழும்பு 03; விஸ்தீரணம்: 0.1953 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 15 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு இரத்மலைனை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப் படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2012ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 08 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

பிரதீப் ரத்நாயக்க,
பிரதேச செயலாளர்,
இரத்மலானை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
இரத்மலானை,
2012.09.11.

09-1114

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.